# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 151/2022**

**Deposition of Witness for PW6**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | சிவஇளங்கோவன் | Caste | : |
| Father/Husband Name | : | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(accused present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 12.03.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது செக்கானூரணி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். சார்பு ஆய்வாளர் முருகராஜா , ஆய்வாளர் சிவசக்தி ஆகியோர்களின் கையொப்பங்கள் எனக்கு தெரியும். நான் அவர்களுக்காக ஆவணங்களை பார்த்து, சாட்சி சொல்கிறேன். கடந்த 18.02.2022 ஆம் தேதி 20.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் முருகராஜா நிலைய பொறுப்பில் இருந்தபோது புகார்தாரர் பாண்டியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்தபுகாரை பெற்று நிலைய குற்ற எண் 61/2022 இதச பிரிவுகள் 279, 337 படி வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த முதல்தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்பு 19.02.2022ம் தேதி காலை 7.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் பிச்சை, மூர்த்தி ஆகியோர்களின் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள்

பாண்டியன், அன்னம்பிள்ளை, ராஜாமணி, யோகராணி ஆகியோர்களையும், மகசர் சாட்சிகளையும் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்தில் காயம்பட்ட பேச்சியம்மாள் என்பவரை இறந்து தகவல் கிடைத்ததால் வழக்கின் சட்டப்பிரிவை 279, 304(A) இதச ஆக பிரிவு மாற்றம் செய்து, பிரிபு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு உடனடியாக அனுப்பி வழக்கை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் முத்துலெட்சுமி அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **(அ.சா.ஆ.6)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு இறந்துபோனவரின் உடலை பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்துள்ளார். அந்த பிரேத விசாரணை அறிக்கை (**அ.சா.ஆ. 7)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சிவசக்தி அவர்கள் இறந்தவரின் பிரேதத்தை முதல் நிலை காவல் செந்தில்முருகன் என்பவர் மூலமாக பிரேத பரிசோதனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி அவரது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். பின்பு சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகராஜாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு 22.02.2022ஆம் தேதி எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலைய ஜாமீனில் விடுவித்துள்ளார். பின்பு விபத்துக்குள்ளாகிய வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் செல்வி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, ஆய்வு அறிக்கைகளை பெற்றுள்ளார். அந்த மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் **(அ.சா.ஆ.8)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் செல்வி என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **(அ.சா.ஆ.9)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறுதியாக சம்பவம் உண்மையென தெரியவந்ததால், எதிரிகளின் மீது

மேற்சொன்ன மாறுதல் செய்யப்பட்ட பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று, சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றல் சரியல்ல. சம்பவ சென்று சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சரிவரபுலண்விசாரணை செய்யாமல், குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு, இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.